# In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur
## O.S. 62/2024
## Old OS.No.130/2020
## Examination of - PW1

| | | |
|---|---|---|
| **Name** | : | சேகர் |
| **Husband Name** | : | ஆளடியான் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | 47 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 06.11.2025.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது இசுக்கழிக்காட்டேரியில் வசித்து வருகிறேன். தாவா சொத்தைப்பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாவா நான் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி எனது வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்து அதனை உறுதிபடுத்தும் வகையில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். ராஜக்கண்ணு என்பவரிடம் 19.03.2019ம் தேதி தாவா சொத்தை கிரையம் பெற்றேன். அந்த அசல் கிரையப்பத்திரம் **வா.சா.ஆ.1** ஆகும். 11.10.2019ம் தேதி பெறப்பட்ட ராஜக்கண்ணு பெயரில் உள்ள கணினி சிட்டா எண் 114 மற்றும் பட்டா 914 தாக்கல் செய்கிறேன். அது முறையே **வா.சா.ஆ.2** மற்றும் **வா.சா.ஆ.3** ஆகும். 20.10.2019ம் தேதியன்று தாவா சொத்துககளுக்கு வாதி தண்டரை குரூப் கிராம நிர்வாக அலுவலர் அவர்களிடம் இருந்து பெற்ற 1420 பசலியில் அடங்கல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.4** ஆகும் (எதிர்தரப்பில் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). 12.02.2015ம் தேதியிட்ட கிருஷ்ணன் பெயரில் உள்ள

வரி ரசீது தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.5** ஆகும் (எதிர்தரப்பில் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). 16.10.2019ம் தேதியிட்டு கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு சர்வே எண். 174/14, 174/5, 174/12, 174/6டி, 177/3 ஆகிய இடங்களை அளந்து அத்து காண்பிக்க நான் அளித்த மனுவினை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.6** ஆகும். 14.06.2019ம் தேதியில் வாதி தாவா சொ்துக்களை அளவீடு செய்ய கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு ரூ.160/- செலுத்தியதற்கான சலான் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.7** ஆகும். 16.10.2019ம் தேதியில் வாதி தாவா சொத்துககளை மீண்டும் அளவீடு செய்து உட்பிரிவு செய்து தருமாறு கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அவர்களுக்கு ரூ. 480/- செலுத்தியதற்காக சலான் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.8** ஆகும். 20.03.2019ம் தேதியில் தாவா சொத்துக்கள் குறித்து விவரங்களை சமர்ப்பிக்குமாறு இணையதளம் வழியாக வாதிக்கு அனுப்பிய ஒப்புகை ரசீதை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.9** ஆகும். வழக்கு தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

(குறுக்குவிசாரணை செய்யவேண்டி வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கனினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/–M.C. Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்